முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2024 சனவரி

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(Financial Controls & Audit)

2024-02-10
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

பக்கங்கள் : 07
வினாக்கள் : 09

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**ஆரியதாச** என்பவர் முன்னணி ஆடை இறக்குமதி நிறுவனமான **ரண்சலா என்டபிரைஸ்** இன் தனி உடமையாளர் ஆவார். அவர் 42 ஆண்டுகளாக தனது வியாபார வணிகத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்கிறார். அவர் தனது மகள்களையும் மகனையும் சட்டரீதியாக தனது வணிகத்தில் ஈடுபடுத்துவதற்கான காலம் கனிந்துள்ளதாக உணர்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **ஆரியதாச** தனது நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக **ரண்சலா என்ரபிரைஸ்** இனை உருமாற்று வதற்குப் (convert) பரிசீலிக்கக்கூடிய வணிக நிறுவனங்களின் இரண்டு (02) வகைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் இனங்காணப்பட்ட வணிக நிறுவன வகைகளின் கீழ்வரும் சட்ட அம்சங்களை **இனங்காண்க** :

(i) வரிவிதிப்பு (Taxation).

(ii) பொறுப்பு (Liability). (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட டீ பெஷன் (தனியார்) கம்பனி** (ஒரு கம்பனி) வணிக இடர்களைக் கண்டறிவதற்கும் நிறுவனத்தின் இடர்களைத் தணிப்பதற்கான நடவடிக்கைகளை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்து வதற்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்குமென ஒரு முகாமைத்துவ அணியை நியமித்ததன் மூலம் ஒரு இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தைத் தாபித்துள்ளது. கம்பனியின் தொடர்ச்சியான சீரான இயக்கத்தை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

இடர் முகாமைத்துவ வேலைச் சட்டகத்தைப் பயன்படுத்துவதன் இரண்டு (02) வாய்ப்புகளை / நன்மைகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

நியாயமானளவு துல்லியமாகவும் முறையாகத் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுவதுமான நிதித் தகவல்களை, அவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கு வழங்குவதில் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்கள் முக்கிய பங்கினை ஆற்றுகின்றன. நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்கள் என இரண்டு வகையான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்கள் காணப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலொன்றின் மூன்று (3) தரப்பினரை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) ‘‘நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்’’ மற்றும் ‘‘வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்’’ ஆகியவற்றுக்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

தரக் கட்டுப்பாட்டு முறைமை என்பது கணக்காய்வு நிறுவனத்திடமிருந்து வேலையின் மாறாத தரத்தை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் ஒரு தொகுப்பாகும். தரக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றில் ஆறு கூறுகள் (elements) காணப்படுவதுடன் தொடர்புடைய ஒழுக்கநெறித் தேவைகள் தரக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒரு கூறாகக் காணப்படுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தொடர்புடைய ஒழுக்கநெறித் தேவைகளின் கீழ் ஒரு நிறுவனம் பேண வேண்டிய சுயாதீனம் பற்றி **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) தனித்தனியான கணக்காய்வு உறுதிப்படுத்தொன்றின் ‘‘மீளாய்வு’’ இன் கீழ் கவனத்திற் கொள்ள வேண்டிய இரண்டு (02) விடயங்களைக் (matters) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட நிம் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனி** (**NHL**) நிருமாணங்கள் மற்றும் குடிசார் பொறியியல் சேவைகளை வழங்குவதில் ஈடுபடுகிறது. **NHL** இன் வெளிவாரியான கணக்காய்வை கடந்த ஆறு (6) ஆண்டுகளாக உமது நிறுவனம் மேற்கொள்கிறது. நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக கடந்த மூன்று (3) ஆண்டுகளில் **NHL** இன் வருவாய் தொடர்ந்து குறைவடைந்திருக்கிறது. நிருமாணத் துறையில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகள் காரணமாக, முகாமைப் பணிப்பாளர் 2022 இல் இரத்தினக் கற்களை வெட்டும் இயந்திரத்தை இறக்குமதி செய்து, இரத்தினக்கல் வணிகத்தில் முதலீட்டை மேற்கொண்டுள்ளார். **NHL** இன் சிரேஷ்ட முகாமையாளர்கள் இரத்தினக்கல் தொடர்பான தொழினுட்பப் பாடநெறியைப் பூர்த்தி செய்துள்ளனர். நிதியாண்டு 2022/23 இல் கடந்த சில மாதங்களில் **NHL** உள்நாட்டு இரத்தினக்கல் அகழ்வாளர்கள் ஊடாக இரத்தினக்கற்களைக் கொள்வனவு செய்து, வெட்டுதல் செயன்முறையைப் பூர்த்தி செய்தன் பின், அவற்றை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்துள்ளது.

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் வரைவுத் தொகுப்பு உங்களுக்குத் தரப்பட்டுள்ளது. இதில் 90% ஆன இரத்தினக்கல் ஏற்றுமதி மூலமான வருவாய் உள்ளடங்குகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒட்டுமொத்த கணக்காய்வுத் தந்திரோபாயத்தை நிறுவும்போது கணக்காய்வாளர் கருத்திற் கொள்ளக் கூடிய மூன்று (03) விடயங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொள்ளும்போது **NHL** இன் கணக்காய்வாளர் புரிந்து கொள்ளவேண்டிய நான்கு (04) பகுதிகளை (areas) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**RF ஹோட்டலின்** கணக்காய்வாளராக உமது நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வின்போது, நிலுவையிலுள்ள கடன்பட்டோரின் பட்டியலில் கீழ்வரும் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருப்பதை நீங்கள் அவதானித்துள்ளீர்கள்.:

| கடன்பட்டோரின் பெயர் | மொத்தம் (ரூபா) | 0-30 நாட்கள் | 30-90 நாட்கள் | 90-120 நாட்கள் | 120 நாட்களுக்கு மேல் |
|---|---|---|---|---|---|
| **AB Tourists** | 1,850,300 | 500,000 | | | 1,350,000 |
| **Lanka Visitors** | (650,000) | (650,000) | | | |
| **Gulf Tours** | 230,000 | 80,000 | 50,000 | 50,000 | 50,000 |

மேலேயுள்ள பட்டியலின் விபரங்களை நீங்கள் பார்த்தபோது, கடன்பட்டோரின் நிலுவைகள் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களுடன் உடன்படவில்லை என்பதைக் கண்டறிந்துள்ளீர்கள். **Lanka Visitors** இற்கான விற்பனை விலைப்பட்டியல்கள் (sales invoices) வெளியிடப்படவில்லை. **AB Tourists** ஆனது தனது நீண்டகால நிலுவை மீதி ரூபா 1,350,000/- இனைச் செலுத்தியிருந்தது எனினும், உரிய காசுத் தொகை கம்பனியின் வங்கிக் கணக்கில் செலவு (credit) வைக்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் முகாமைப் பணிப்பாளரிடம் கூறியபோது, அவர் அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்களையும் ஆராயுமாறும் ஏதாவது மோசடி இடம்பெற்றுள்ளதா என்பது பற்றி விபரமான அறிக்கையொன்றை தனக்கு வழங்குமாறும் உங்களிடம் கேட்டிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மோசடி (Fraud) என்பதை **பொருள் வரையறை செய்க.** (03 புள்ளிகள்)

(b) நிதிக் கூற்றுகளின் மோசடிகள் குறித்த முகாமைப் பணிப்பாளரின் கோரிக்கை தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பினை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) மோசடியான நிதி அறிக்கையிடலின் இடரை அதிகரிக்கின்ற மூன்று (03) நிலைமைகள் அல்லது நிகழ்வுகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட சிரான் கார்மென்ட் (தனியார்) கம்பனி** (SGL) அரச வங்கியொன்றில் இருந்து குறைந்த வட்டியில் ரூபா 100 மில்லியன் கடனைப் பெறுவது பற்றிப் பரிசீலிக்கிறது. **SGL** இன் முகாமைப் பணிப்பாளர், கடனைப் பெறுவதற்காக அடுத்த 5 ஆண்டுகளுக்கான நிதிசார் எதிர்வுகூறலைத் தயாரிக்கின்ற பணியை பொறுப்பேற்குமாறு உங்களது நிறுவனத்திடம் கோரிக்கை வைத்துள்ளார். **SGL** ஆனது ஆடைகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக நிதிக் கஷ்டங்களுக்கு முகங்கொடுத்துள்ளதுடன் இந்தக் கடனானது **SGL** இன் தொழிற்படு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையாக உள்ளது.

வெளிவாரியான கணக்காய்வு பிறிதொரு கணக்காய்வு நிறுவனத்தால் நடத்தப்பட்டது, ஆனால் வங்கிக் கடனுக்கான நிதிசார் எதிர்வுகூறலை நீங்கள் நிறைவு செய்தவுடன், **SGL** இன் அடுத்த நிதியாண்டிற்கான வெளிவாரியான கணக்காய்வு ஈடுபடுத்தலை உமது நிறுவனத்திடமே கையளிப்பதற்கு **SGL** இன் முகாமைப் பணிப்பாளர் தீர்மானித்துள்ளார். **SGL** இன் கணக்காய்வு ஏற்றுக்கொள்ளப்பட்டால், உமது நிறுவனத்தின் 25% வருமானம் **SGL** இலிருந்து கிடைக்கும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **SGL** இன் வெளிவாரியான கணக்காய்வு ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்ளும்போது நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு (02) பிரதான அம்சங்களையும் (key aspects) தேவைப்பாடுகளையும் (requirements) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) மேற்படி விடயங்கள் தொடர்பில் அடிப்படை ஒழுக்கநெறிக் கோட்பாடுகளுடன் இணங்குவதற்குக் காணப்படுகின்ற இரண்டு (02) அச்சுறுத்தல்களை (threats) **மதிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்திற்கு மேற்படி அச்சுறுத்தல்களை நீக்குவதற்கு / குறைப்பதற்கு உமது நிறுவனத்தில் நடைமுறைப்படுத்தும் மூன்று (03) பாதுகாப்புகளை (safeguards) **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட பிளம்பிங் வேல்ட் கம்பனி** (PWL) நீர்க்குழாய் பொருத்தல் உபகரணங்களின் மொத்த மற்றும் சில்லறை விற்பனை வணிகத்தில் ஈடுபடுகிறது. இருப்பு அலுவலரின் (Inventory Officer) கோரிக்கையின் அடிப்படையில் கொள்வனவுக்குப் பொறுப்பான அலுவலர் கொள்வனவுக் கட்டளைகளை இடுவதுடன் கொள்வனவு முகாமையாளரால் கொள்வனவுக் கட்டளை அங்கீகரிக்கப்படுகிறது. பின்னர், உதவிக் கணக்காளருக்கு ஆவணங்கள் பதிவுக்காக அனுப்பப்படுகின்றன. கம்பனியில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வாறாயினும், பதிவு செய்வதற்காக வழங்குநர்களைத் தெரிவு செய்வதில் கம்பனி முறையான கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. கம்பனியானது குறைந்த மதிப்புள்ள பெரிய இருப்புகளையும் அதிக மதிப்புள்ள சிறிய இருப்புகளையும் பேணுகிறது. இதனால் உயிரியளவியல் (biometrics) முறையில் களஞ்சியத்திற்கான அணுகல் பாதுகாக் கப்படுகிறது. முகாமையால் இருப்பு மட்ட அறிக்கைகள் தினமும் மீளாய்வு செய்யப்படுகின்றன. பௌதிக ரீதியான மாதாந்த இருப்புக் கணக்கெடுப்பானது இருப்பு அலுவலரால் மேற்கொள்ளப்படுவதுடன் இருப்புகள், பௌதிக ரீதியான இருப்புக் கணக்கெடுப்பின் அடிப்படையில் முறைமையில் சீர்செய்யப் படுகின்றன.

கட்டுப்பாடுகளுக்குப் பின்னால் உள்ள இடர் பற்றிய புரிதல் இன்மையால் தொடர்புடைய பணியாளர்களால் குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை உள்ளகக் கணக்காய்வாளர் அறிக்கை யிட்டுள்ளார். இருப்புகளின் தரமானது இருப்பு அலுவலரால் பரீட்சிக்கப்படுகிறது. ஆனால் குறிப்பிட்ட சில உருப்படிகளின் தரத்தைப் பரீட்சிப்பதற்கான போதிய அறிவு அவரிடம் காணப்படவில்லை. அவரிடம் போதிய அறிவு காணப்படாததால், கம்பனியானது தரம் குறைந்த பொருட்களால் நட்டமடைந்திருக்கிறது. கம்பனி தற்போது பொருள்களின் தரத்தைப் பரிசீலிக்கக்கூடிய நிபுணர் ஒருவரை பணியமர்த்துவது பற்றிக் கவனம் செலுத்துவதுடன் அந்த நிபுணரின் சம்பள எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது.

தினசரி விற்பனை அறிக்கையை விற்பனை முறைமையிலிருந்து தயாரிக்க முடியவில்லை. மேலும், வாடிக்கையாளர்கள் தங்களுக்கு அனுப்பப்பட்ட விற்பனை விலைப்பட்டியலில் (sales invoice) குறிப்பிடப்பட்டிருந்த விலையானது விலைமனுவில் (quotation) காணப்பட்ட விலையிலிருந்து வேறுபடுவதாக முறைப்பாடு தெரிவித்துள்ளனர். விற்பனை முறைமையில் புதுப்பிக்கப்பட்ட விலைப் பட்டியலில் வழுக்கள் காணப்படுவதையும் இதனால் அங்கீகரிக்கப்பட்ட விலைப் பட்டியலுடன் விலை வேறுபடுகிறது என்பதையும் விற்பனைப் பணிப்பாளர் கண்டறிந்துள்ளார். மேலும், சில கடன்பட்டோர் மீதிகள் கடன்பட்டோரின் பட்டியலில் காணப்படவில்லை. வாடிக்கையாளரிடமிருந்து சமீபத்தில் கட்டளைகள் எதுவும் பெறப்படாத காரணத்தால் பிரதான கோப்பிலிருந்து வாடிக்கையாளர் விபரங்களை விற்பனைப் பணியாளர்கள் நீக்கியிருந்ததே இதற்கான காரணமாகும். அத்துடன், வைரஸ் தாக்கம் காரணமாக விற்பனை முறைமையானது ஒரு நாள் செயலிழந்திருந்ததுடன் சில தரவுகள் தொலைந்தும் போயிருந்தன. அந்தத் தரவுகளை மீளப் பெறுவதற்கான காப்புப் பிரதிகள் (backups) கிடைக்கவில்லை.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) (i) **PWL** இன் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் ஐந்தினை (05) **அடையாளங் காண்க.** (05 புள்ளிகள்)

(ii) மேலே (a)(i) இல் அடையாளங் காணப்பட்ட பலவீனங்களைச் சமாளிப்பதற்கு ஒவ்வொரு பரிந்துரை வீதம் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(b) (i) **PWL** இன் கொள்வனவு மற்றும் இருப்பு தொடர்பில் நடைமுறைப்படுத்தக்கூடிய நான்கு (04) கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(ii) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒரு நோக்கமான, “செயற்பாடுகளில் பயனுறுதித் தன்மையும் வினைத்திறனும்” என்பதன் கருத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் நான்கு (04) உள்ளார்ந்த வரையறைகளை (inherent limitations) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) **PWL** இன் விற்பனை முறைமை தொடர்பில் நடைமுறைப்படுத்த வேண்டிய இரண்டு (02) பிரயோகக் கட்டுப்பாடுகளையும் இரண்டு (02) பொதுக் கட்டுப்பாடுகளையும் **பட்டியலிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) **பெரேரா** என்பவர் ஒரு கணக்காய்வு நிறுவனமான **பெரேரா அன்ட் கோ.** இன் ஒரேயொரு பயிற்சியாளர் ஆவார். இந்நிறுவனம் பகுப்பாய்வு நடைமுறைகளுக்கான ஒரு வழிகாட்டியை உருவாக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. பயிற்சி முகாமையாளர் கீழ்வரும் தேவைகள் பொருத்தமானதாக இருக்குமெனக் கண்டறிந்துள்ளார் :

- நிறுவனத்தின் நிதித் தகவல்களை தொடர்புடைய பிற நிதித் தகவல்களுடன் ஒப்பிடுதல்.
- போக்குப் பகுப்பாய்வைப் பயன்படுத்தி, நிதிசார்ந்த மற்றும் நிதிசாராத தகவல்களுக்கிடையிலான தொடர்புகளை இனங்காணுதல்.

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட A கம்பனியின்** கணக்காய்வை மேற்கொள்ளும்போது, தொடர்புடைய தரப்பு ஊடுசெயல்களின் வெளிப்படுத்துகையை (disclosure) கணக்காய்வு அணியின் கனிஷ்ட உறுப்பினர் ஒருவருக்கு **பெரேரா** ஒதுக்கியிருந்தார். கணக்காய்வு ஆவணம் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது :

- நிதிக் கூற்றுக்களில் ஒரேயொரு வெளிப்படுத்துகை மாத்திரமே செய்யப்பட்டுள்ளதால் இடர் மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. முன்னைய ஆண்டின் தொடர்புடைய தரப்பு வெளிப்படுத்துகைக் குறிப்புகள் பேரேட்டிலிருந்து பெறப்பட்ட நடப்பு ஆண்டு மீதிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் கீழ்வரும் தொடர்புடைய தரப்பு ஊடுசெயல்கள் இடம்பெற்றிருந்தன :
  - **வரையறுக்கப்பட்ட D கம்பனியிடமிருந்து** பெறப்பட்ட நீண்ட காலக் கடன் – ரூபா 2,000,000/-.
  - தொடர்புடைய ஒரு கம்பனிக்கு வழங்கப்பட்ட குறுங் கால முற்பணம் – **வரையறுக்கப்பட்ட D கம்பனி** – ரூபா 1,250,000/-.

- **வரையறுக்கப்பட்ட D கம்பனியில்** முதலீடு - ரூபா 50 மில்லியன்.
- **வரையறுக்கப்பட்ட D கம்பனியிடமிருந்து** பெற்ற பங்கிலாபம் – ரூபா 500,000/-.

- கணக்காய்வு நடைமுறைகளாக, கடன் மீதிகள் மற்றும் முதலீட்டுச் சான்றிதழ்களின் உறுதிப் படுத்தல்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன் பங்கிலாப பற்றுச்சீட்டுகளும் பரீசீலிக்கப்பட்டன. மேற்படி மீதிகள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டதுடன், மேற்படி மீதிகள் மீதான முகாமைப் பிரதிநிதித்துவமும் பெறப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பயிற்சி முகாமையாளரால் இனங்காணப்பட்டவாறு தரப்பட்ட தேவைப்பாடுகளின் கீழ் உள்ளடக்கப்படக்கூடிய இரண்டு (02) பகுப்பாய்வு நடைமுறைகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) தொடர்புடைய தரப்பு ஊடுசெயல்கள் மீது ஆற்றப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளின் பொருத்தப்பாட்டுத்தன்மையை **மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(c) தொடர்புடைய தரப்பு ஊடுசெயல்களை இனங்காண்பதற்கான கணக்காய்வாளரின் பொறுப்பை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(d) அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னரான நிகழ்வுகளை மீளாய்வு செய்யும்போது மேற்கொள்ளப்படக்கூடிய நான்கு (04) கணக்காய்வு நடைமுறைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(B) உரிய கணக்காய்வு அறிக்கைகளின் முன்-அங்கீகாரத்திற்காக மூன்று கணக்காய்வு சேவைநாடுநர் களுடன் தொடர்புடைய கீழ்வரும் விடயங்கள் கணக்காய்வுப் பங்காளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன :

| **கணக்காய்வுச் சேவைநாடுநர்** | **பொருண்மை (ரூபா)** | **தொடர்புடைய பிரச்சினைகள்** |
|---|---|---|
| **வரையறுக்கப்பட்ட A கம்பனி** | 1 மில்லியன் | SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்கள் மூலமான வருமானம் என்ற நியமத்துடன் கணிசமானளவு இணங்காமையும் தவறான வருமான ஏற்பிசைவுக் கொள்கையின் தவறான வெளிப்படுத்துகையும். வருமானத்தின் எல்லை வழு (cut off error). இரண்டு பிரச்சினைகளும் நிதிக் கூற்றுகளில் கணிசமான விகிதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலாபம், தொக்கு, விற்பனை மற்றும் வியாபார வருமதிகளைப் பாதிக்கின்றன. பாதிப்பானது பொருண்மையை விட கணிசமானளவு அதிகமாகும். |
| **வரையறுக்கப்பட்ட B கம்பனி** | 125,000 | முழுமையாக ஏற்பாடு செய்யப்படக்கூடிய ஒரு நீண்டகால கடன்பட்டோர் நிலுவை ரூபா 150,000/- இற்கு ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை. |
| **வரையறுக்கப்பட்ட C கம்பனி** | 5.75 மில்லியன் | மொத்த வியாபார வருமதிகள் தொகையான ரூபா 7,768,000/- ஆனது மொத்தச் சொத்துக்களில் 5% ஐப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. கடன்பட்டோரின் சேத இழப்பிற்காக எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. முறைமை வழு (system error) காரணமாக கடன்பட்டோர் கால அறிக்கையைத் (aging report) தயாரிக்க முடியவில்லை. சேத இழப்பற்ற (not impairing) கடன்பட்டோரின் பொருத்தப்பாட்டுத்தன்மையை கணக்காய்வாளரால் சரிபார்க்க முடியவில்லை. |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**வரையறுக்கப்பட்ட A கம்பனி, வரையறுக்கப்பட்ட B கம்பனி** மற்றும் **வரையறுக்கப்பட்ட C கம்பனி** ஆகியவற்றின் சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையிலுள்ள அபிப்பிராயம் மீது தரப்பட்ட பிரச்சினைகளின் தாக்கத்தை முறையே **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |